## இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிறுவகத்தின் பெயரில் தனியார் வங்கியில் நிலையான வைப்பில் ரூபா 82,900,000 தொகை முதலீடு செய்ய்பபட்டிருந்த போதிலும் அப்பெறுமதி 2012 இன் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அப்பணம் நன்கொடை நிதியத்திற்குரியதாக (Endowment Fund) இருந்தமை கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்நிதியம் தொடர்பாக மீளாய்வாண்டின் நிதிநிலைமைக்கூற்றில் எந்தத் தகவலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டில் திறைசேரியிடமிருந்து கிடைக்க வேண்டியதாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும் திறைசேரியிடமிருந்து உரிய ஆண்டின் பின்னர் கிடைக்காத தொகையான ரூபா 793,845 தொகை ஆண்டின் செலவினமாகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 1.2.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் -நியம இல.1

பந்தி இல. 77, 78, 79 மற்றும் நிதிநிலைமைக்கூற்றில் குறிப்பிடப்பட்ட மாதிரியின் பிரகாரம் திறைசேரி உண்டியல் மற்றும் நிலையான வைப்புக்கள் உரிய பிரகாரம் வகைப்படுத்தப்பட்டு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கிடைக்கவேண்டிய கணக்குகள்

#### (அ) கடன்பட்டோர்

கிடைக்க வேண்டிய கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 7,402,111 ஆக இருந்ததுடன் அதில் நீண்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,311,005 தொயைான கடன்மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) பதவியணியினர் கடன்

கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் சகல பதவியணியினரும் ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தர்களுக்கு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்காக கடன் வழங்கப்பட்டிருந்தன.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 4.2.6 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த, அரையாண்டு மற்றும் காலாண்டு ரீதியான முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாடுகளின் விளைவுகள் ரூபா 916,970 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 343,442 ஆனமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 573,528 ஆன அதிகரிப்பினைக் காட்டியது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

#### (அ) மொத்த வருமானம்

2011 ஆண்டில் ரூபா 101,197,612 தொகையான கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் மொத்த வருமானம், 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 121,441,978 தொகை வரை ரூபா 20,244,366 இனால் அதாவது 20 சதவீதம் அதிகரித்திருந்தது. அவ்வதிகரிப்புகளுக்குத் தாக்கமளித்த விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடயம் | வருமானம் | | அதிகரிப்பு |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| திறைசேரியின் பங்களிப்பு | 13,666,000 | 12,701,000 | 965,000 |
| நன்கொடை நிதியத்தின் பங்களிப்பு | 22,000,000 | 7,500,000 | 14,500,000 |
| செயலமர்வு மற்றும் மாநாட்டு வருமானம் | 7,651,720 | 3,996,181 | 3,655,539 |
| வட்டி வருமானம் | 20,386,916 | 14,569,419 | 5,817,497 |
| ஆய்வுகூடத்தை வாடகைக்கிடல் | 1,172,320 | 222,140 | 950,180 |

**(ஆ) செயற்திட்ட வருமானம்**

நிறுவகத்தின் பிரதான வியாபார நடவடிக்கையான கற்கைச் செயற்திட்டத்திலிருந்து மீளாய்வாண்டில் பெறப்பட்ட வருமானம் ரூபா 49,355,732 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் ரூபா 54,160,182 தொகையான வருமானத்துடன் இணக்கஞ் செய்த போது ரூபா 4,805,080 தொகை அதாவது 9.8 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்ட மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

1988 இன் 53 ஆம் இலக்க இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 6 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிறுவகத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோள்களுக்கிடையில் (அ) உப பிரிவின் பிரகாரம் தேசிய அபிவிருத்தித்திட்டங்களுக்கும் கொள்கைகளுக்கும் உரிய கற்கைகளை ஆரம்பித்தல் , முன்னேற்றுதல் மற்றும் நடாத்துதல் போன்றவை செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது அவ்வாறான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

**(அ) ஆராய்ச்சிச் செலவினம்**

2011 ஆம் ஆண்டில் ரூபா 13,289,655 தொகையான ஆராய்ச்சிச் செலவினம் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 20,623,821 வரை ரூபா 7,334,166 இனால் அதாவது 60 சதவீதத்தினால் உயர்வடைந்திருந்தது. செயற்திட்ட வருமானம் 10 சதவீதத்தினால் குறைவடையும் போது ஆராய்ச்சிச் செலவினம் 60 சதவீதத்தினால் உயர்வடைந்தமைக்கான காரணம் நிறுவகத்திற்குக் கிடைத்த செயற்திட்டம் நிறுவகத்தின் வெளிக் கம்பனி அல்லது நபர்களினால் மேற்கொள்வதற்கு அனுப்பப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) கற்கைச் செயற்திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கற்கைச் செயற்திட்டத்திற்காக கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கை இருக்கவில்லை.

(ii) கொள்கை கற்கைகள் நிறுவகம் மற்றும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டுச் சேவை முகவர் நிறுவனத்துடன் செயற்திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(iii) கற்கைச் செயற்திட்டங்களில் பூர்த்தி அறிக்கை வழங்குவதில் தாமதம்.

(iv) ஆராய்ச்சிப் பிரிவில் நிறைவேற்றப்பட்ட கற்கை முன்னேற்றங்களின் பிரகாரம் குறிப்பிட்ட திகதிகளில் முறையாக விலைப்பட்டியல் வழங்கப்படாமை மற்றும் அது தொடர்பாக ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் கணக்குப் பிரிவுகளுக்கிடையே எவ்வித தொடர்பாடல்களும் காணப்படவில்லை.

(v) முழுமையாகச் செய்யப்பட்ட செயற்திட்டங்களுக்காக விலைப்பட்டியல் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கற்கைச் செயற்திட்டங்கள் தனியார் கம்பனிகளின் மூலம் நிறைவேற்றப்படுதல்**

(i) இலங்கை அரசாங்கத்திற்கும் இந்தியாவிற்குமிடையில் மின்சார மாற்றீட்டு இணைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கற்கை தொடர்பான உள்ளக இணைப்பு (Feasibility study on the interconnection between India and Sri Lanka power transmission Grids complementary studies to be conducted for the Government

of Sri Lanka) மற்றும் தொடர்பான சாத்தியவள ஆய்வுக் கற்கைச் செயற்திட்டத்திற்காக மின்சக்தி, எரிபொருள் அமைச்சிடமிருந்து ரூபா 6,036,820 தொகை கிடைத்திருந்ததுடன் இந்த ஒப்பந்தம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

* மின்சக்தி, எரிபொருள் அமைச்சின் இணக்கப்பாட்டுடனும் அவ்வமைச்சின் தேவைகளுக்கு இணங்கும் வகையிலும் கற்கைகள் உரிய வகையில் பூர்த்தி செய்யப்பட்டமைக்கு கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் பொறுப்பவாய்ந்த உத்தியோகத்தரின் அல்லது குழுவின் சிபார்சின்றி கொடுப்பனவுச் செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.

* நிறுவகத்திற்குக் கிடைக்கின்ற பல்வேறு கற்கைகள் வெளிநிறுவனங்களுக்குக் கையளிக்கின்ற போது நிதிப் பங்களிப்பிற்காக அறவிடப்படுகின்ற பணம் தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படாது கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டது.

* இந்த ஒப்பந்தம் தொடர்பாக கொள்வனவு ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் இந்திய வர்த்தக சமூகத்திற்காக இலங்கையில் காணப்படுகின்ற வர்த்தக சந்தர்ப்பங்கள் தொடர்பான கையேடு (Hand book on the Indian – SL free trade Agreement/ Trade opportunities in SL for Indian community) என்ற இரண்டு கற்கைகளும் இந்திய உயர்ஸ்தானிகருடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் முறையே ரூபா 700,000 மற்றும் ரூபா 705,000 தொகைகளாக ரூபா 1,405,000 கூட்டுத்தொகையானது ஒப்பந்த இறுதியின் போது செலுத்தவேண்டியிருந்தது. இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கையொப்பமிட்ட 2011 மார்ச் 07 அந் திகதி தொடக்கம் 14 நாட்களுக்குள் அதாவது 2011 மார்ச் 21 ஆந் திகதி இந்திய உயர்ஸ்தானிகரினால் ரூபா 700,000

தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

* உடன்படிக்கையின் பிரகாரம் 2011 மே 31 ஆந் திகதிவரையில் இறுதிவரைவு மற்றும் 1000 கையேடுகள் அச்சிட்டு கையளிக்கப்பட வேண்டிய போதிலும் குறிப்பிட்ட திகதியில் உள்ளவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

* இந்திய உயர்ஸ்தானிகரிடமிருந்து அறவிடவேண்டிய எஞ்சிய ரூபா 705,000 தொகையினை அறவிடுவது தொடர்பாக போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) வடக்கு- கிழக்கு மாகாண சேவைகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் தொடர்பாக உள்ளூராட்சி மெய்மையாய்வுகளை நடாத்துவதற்காக ஆலோசனைச் சேவைகளை வழங்கும் கற்கைச் செயற்திட்டத்திற்குரிய (consultancy service for local authority survey for Northern and Eastern province North East local service Improvement project) பகுதி வேலைகளுக்காக ரூபா 1,382,500 பெறுமதியான ஒப்பந்தத்தில் கொள்வனவு ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) எழுத்துமூல விண்ணப்பமின்றி நிறைவேற்றப்பட்ட செயற்திட்டங்கள்**

முறையற்ற பகுதிகள் தொடர்பான மெய்மையாய்வு மற்றும் சேவையில் ஈடுபடுத்தக்கூடிய அங்கவீனர்கள் தொடர்பான மெய்மையாய்வு (Survey of informal sector Enterprises and Survey of employable disables) செய்யப்பட்டு பேணப்பட்ட கோவையின் பிரகாரம் மேற்கூறப்பட்ட செயற்திட்டம் தொழில் திணைக்களத்தின் வேண்டுகோளின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டு வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 564,163 ஆக இருந்தது. இந்தக் கற்கைக்காக தொழில் திணைக்களத்தினால் வேண்டப்பட்ட எந்த எழுத்து மூல ஆவணங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ஆராய்ச்சி செயற்திட்டத்தை நிறைவேற்றக்கூடிய நபர்கள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல் தொடர்பான தகவல்கள் ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) விலைப்பட்டியலின் பெறுமதி ரூபா 1,725,733 தொகையான கொடுக்கல் வாங்கல்களுக்கான பெறுமதி சேர் வரி ரூபா 184,900 தொகை வாடிக்கையாளரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(எ) ஊழியர் நலன்புரி நடவடிக்கைகளுக்கான நிதியமொன்று 09 வருடங்களுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்த நிதியத்தில் ரூபா 1,300,225 தொகை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. 2012 மே 31 ஆந் திகதிவரையில் நிதியத்தினால் உத்தியோகத்தர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக எத்தொகையும் செலவிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2011 ஆம் ஆண்டில் ரூபா 1,425,719 தொகையான விரிவுரை மற்றும் செயலமர்வுச் செலவினங்கள் ரூபா 5,574,930 தொகை வரை ரூபா 4,149,211 இனால் அதாவது 291 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. செயலமர்வுச் செலவினங்கள் அதிகரித்திருந்த போதிலும் முன்னைய ஆண்டில் செயலமர்வு வருமானமான ரூபா 3,996,181 தொகைக்கு ஒப்பீடாக மீளாய்வாண்டில் ரூபா 7,651,720 ஆனமையால் வருமானம் 91 சதவீதத்தினால் மாத்திரமே அதிகரித்திருந்தது.

**3.3 போலியானவைகள்**

---

தனியார் பிரிவின் ஆபத்துக்களைக் குறைக்கும் செயற்திட்டம் தொடர்பான கற்கையை மேற்கொள்வதற்கான ஆலோசனைச் சேவையினை வழங்குதல் செயற்திட்டம் (PJ 65 F Consultancy for a study on private sector disaster Risk Reduction) UNISDR நிறுவகத்தின் கற்கைச் செயற்திட்டமாக இருந்ததுடன் இச்செயற்திட்டத்தை நிறைவேற்றுதல் நிறுவனத்தின் மூன்று உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அமெரிக்க டொலர் 10,000 தொகை கற்கைச் செயற்திட்டத்திற்குப் பொறுப்பாகச் செயற்பட்ட உத்தியோகத்தரின் பிரத்தியேக வங்கிக் கணக்கில் பெறப்பட்டதன் பின்னர்

கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. ஆராய்ச்சிப் பதவியணியினர் சேவைப்பங்களிப்பு நிறுவனங்களில் தனியார் வங்கிக் கணக்குகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதலின் தேவை கணக்காய்வின் போது விளக்கப்பட்டிருக்கவிலை.

**3.4 பதயியனியிணர் நிருவாகம்**

மீளாய்வாண்டிற்குரிய நிறுவகத்தின் பதவியணியினரின் செலவு ரூபா 49,860,529 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் பதவியணியினர் செலவினமான ரூபா 46,371,858 தொகையுடன் ஒப்பிடுகின்ற போது ரூபா 3,488,671 இனால் அதிகரித்திருந்தது.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.2(பீ) பந்தியின் பிரகாரம் சகல நிறுவனங்களும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரைப் பேணவேண்டியிருந்த போதிலும் நிறுவகத்தின் பதவியணியினருக்காக (cadre) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 மே 26 அந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் 1 ஆம் பந்தியின் பிரகாரம் சம்பளம் மற்றும் படிகள் தொடர்பாக சம்பளம் மற்றும் ஆளணி எண்ணிக்கை தொடர்பான ஆணைக்குழுவின் சிபார்சைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆராய்ச்சி பதவியணியினரில் 20 அங்கத்தவர்களுக்கு 2012 ஆம் ஆண்டின் போது கையளிக்கப்பட்ட செயற்திட்டங்கள், அந்த செயற்திட்டங்களின் செயல்முன்னேற்றம் மற்றும் பதவியணியினர் ஈடுபட்ட ஏனைய கடமைகள் என்பன தொடர்பான விபரங்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருந்த போதிலும் பூரணப்படுத்தப்படாத விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 1988 இன் 53 ஆம் இலக்க இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 6(அ) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகம் அதன் செயற்பாட்டுக் கைநூலைத்

திட்டமிட்டு அதன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக தலைவர் அறிவித்திருந்தார்.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2013 ஆம் ஆண்டு முடிவடையும் வரையான காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது காலரீதியாக மீளாய்வு செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்படமைக்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2012 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

### 4.3 கணக்காய்வு குழு

2012 ஆம் ஆண்டின் போது ஒரு கணக்காய்வுக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநிதியொருவர் அவதானிப்பாளராகப் பங்குபற்றியிருக்கவில்லை.

### 4.4 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகம் 2012 ஆம் ஆண்டிற்காக தயாரித்த பாதீடு கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அரசாங்க பாதீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்காக உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைகளுக்கான செலவினம் மாத்திரம் கணிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 4.6 தீர்வுகாணப்படாத கணக்காய்வு பந்திகள் தொடர்பான அவதானிப்புக்கள்

### (அ) பாராளுமன்ற பொது முயற்சிக் குழுவின் 2012 யூலை 26 ஆந் திகதிய கூட்ட கட்டளை

(i) மனித வள முகாமைத்துவ செயல்நடைமுறைகளுக்கான கட்டளை இல. 10 இன் பிரகாரம் திறைசேரியின் எழுத்துமூல அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) செயற்பாட்டுக் கையேட்டிற்கான கட்டளை இல. 13 இன் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) நன்கொடை நிதியத்தின் கட்டளை இல. 20 இன் பிரகாரம் முகாமைத்துவ சபையினால் கணக்குகள் தயாரிக்கப்படும் போது கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படுவது கண்காணிக்கப்பட்டிருக்க வில்லை.

### (ஆ) 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவில் டொரிங்டனில் அமைந்துள்ள சமுர்த்தி நாற்றுமேடைக் காணியில் ½ ஏக்கர் கொள்கை கற்கைகள் நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்கான குத்தகையாக ரூபா 5,460,000 தொகை தற்போது செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக இதுவரையும் நீண்ட கால குத்தகை உரித்துறுதி பெறப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கற்கை செயற்திட்டம்

(ஆ) கடன்பட்டோர் கட்டுப்பாடு

(இ) பதவியணியினர் கடன்

(ஈ) நூலகப் புத்தகப் பாவனை